ஸ்ரீபெரும்புதூர் கார் தொழிற்சாலையில்

3 ஆயிரம் பேருக்கு நேரடி வேலை வாய்ப்பு கிடைக்கும்

கருணாநிதி தகவல்

சென்னை, ஜூலை. 20-

"ஸ்ரீபெரும்புதூரில் தொடங்க இருக்கும் கார் தொழிற் சாலையில் 3 ஆயிரம் பேருக்கு நேரடி வேலை வாய்ப்பு கிடைக்கும்" என்று முதல்-அமைச்சர் கருணாநிதி கூறினார்.

கார் தொழிற்சாலை

தமிழக சட்டசபையில் நேற்று உறுப்பினர்கள் கேள்விக்கு ராயன் (வ.கம்யு) செங்கை சிவம் ஆகியோர் "தென் கொரிய நாட்டின் "ஹுண்டாய்" கார் தொழிற்சாலை தொடங்கும் பணி எந்த நிலையில் உள்ளது?" என்று கேள்வி எழுப்பினார்கள்.

அதற்கு முதல்-அமைச்சர் கருணாநிதி அளித்த பதிலும் அதைத் தொடர்ந்து நடந்த விவாதமும் வருமாறு:-

முதல்-அமைச்சர் கருணாநிதி:- தென் கொரிய நாட்டின் "ஹுண்டாய்" நிறுவனம் தமிழ் நாட்டில் செங்கை மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் அருகே இருங் காட்டுக்கோட்டை கிராமத்தில் வருடம் ஒன்றுக்கு ஒரு லட்சம் கார்களை தயாரிப்பதற்கும், தொடர்ந்து 2 லட்சம் கார்கள் தயாரிப்பதற்கும் எனது முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத் தாகி உள்ளது.

இதற்கான நில ஆர்ஜித பணிகள் நடைபெற்று வருகின்றன. கம்பெனியாருக்கு வழங்க வேண்டிய சலுகைகள் மற்றும் உதவிகள் பற்றி ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்த அரசின் பிரதிநிதிகளுக்கும், கம்பெனிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ்

சுப்பராயன் (வ.கம்யு):- சென்னை அருகே உள்ள ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை மூடப்பட்டு இருப்பதால் தொழிலாளர்கள் கஷ்டப்பட்டு வருகின்றனர். முதல்-அமைச்சர் தனது செல் வாக்கை பயன்படுத்தி இப்போது தொடங்கப்படும். வெளிநாட்டு கார் தொழிற்சாலையில் அவர் களை வேலைக்கு சேர்த் துக்கொள்ள முயற்சி மேற் கொள்வீர்களா?

கருணாநிதி:- இப்போது இது தொடர்பாக ஒரு நிலை மேற் கொண்டால், தொழிலாளர்கள் நம்பி இருக்கும் ஸ்டாண்டர்டு தொழிற்சாலை திறக்கப்படுமா என்ற கேள்வி எழும். ஸ்டாண் டர்டு மோட்டார் தொழிற் சாலையை திறக்க அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது.

நிதிநிலை அறிக்கை

செங்கை சிவம் (தி.மு.க.):- நிதிநிலை அறிக்கையில் தொழில்துறை திட்டங்கள் இல்லை என்று சிலர் கூறி வருகிறார்கள். அனைவரும் தெளிவு பெற புதிய தொழில் திட்டம் பற்றி கூறுவீர்களா?

கருணாநிதி:- கடந்த 2 மாத காலத்தில் எத்தனை தொழில்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. எத்தனை திட்டங்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளன. எத்தனை திட்டங்களுக்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று நிதிநிலை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகள் இல்லை என்று பேசினால் அவர்களுக்கு நிதிநிலை அறிக்கையில் உள்ள அந்த பக்கங்களை புரட்டிக்காட்ட வேண்டும்.

ஏழைகள் செல்ல கார்

ஞானசேகரன் (தமா.கா.):- கடந்த 5 ஆண்டுகளில் உறுப் பினர்களின் கேள்விகளுக்கு முதல்-அமைச்சர் பதில் கூறுவது இல்லை என்ற நிலை மாறி ஒரு முதல்-அமைச்சர் பதில் கூறும் நிலை மாறி உள்ளது.

கார்கள் அதிக விலையாக உள்ளன. சாதாரண ஏழை மக்களும் காரில் செல்லும் வகையில் ரூ.1 லட்சத்துக்கு கார் வழங்க நீங்கள் திட்டம் வகுப்பீர்களா?

கருணாநிதி:- ஏழைகள் காரில் போகும் காலம் வர வில்லை. அந்த காலத்தை உருவாக்க நாம் பாடுபடுவோம்.

14 ஆண்டுக்கு வரி இல்லை

பரிதி இளம் வழுதி (முனை சபாநாயகர்):- புதிய கார் தொழிற்சாலைக்கு அரசு அளிக்கும் சலுகைகள் என்ன?

கருணாநிதி:- தொழிற்சாலை தொடக்கத்துக்கு தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர், மின்சாரம், சாலை வசதிகள் செய்து தரப்படும். கடந்த ஆட்சியில் தொடங்கப்பட்ட கார் தொழிற்சாலைக்கு 14 ஆண்டு களுக்கு விற்பனை வரி தள்ளி வைக்கப்பட்டு உள்ளது. அதையே இந்த அரசும் பின் பற்றி 14 ஆண்டுகளுக்கு விற் பனை வரி தள்ளி போடப்பட் டுள்ளது.

இடமாற்றம்

தெய்வநாயகம் (தமா.கா.):- இந்த தொழிற்சாலை மதுரையில் தான் வரும் என்று சிலர் புரளியை கிளப்பிவிட்டனர். இதனால் தொழி மக்கள் அங்கு வர தயங்குகிறார்கள். அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

கருணாநிதி:- இந்த தொழிற்சாலை அதிபர்கள் ஸ்ரீபெரும்புதூரில் இடம் கேட்டனர். அதற்கு சில மாதங்கள் ஆகும். எனவே அரசு கைவசம் உள்ள இடம் அரக்கோணத்தில் உள்ளது. அதில் தொழிற்சாலை தொடங்குங்கள் என்று கூறி அதிகாரிகள், இடத்தை காட்டி னார்கள். ஆனால் அவர்கள் சில மாதங்கள் ஆனாலும் பரவா யில்லை என்று கூறி உள்ளனர்.

அரக்கோணத்துக்கு வராத வர்கள் மதுரைக்கு எப்படி வருவார்கள்?

வேலை வாய்ப்பு

தாமரைக்கனி (அ.இ.அ.தி. முக.):- மதுரையில் இந்த தொழிற்சாலை வரும் என்று கூறி வேலை கேட்டு 1000 பேர் மனு செய்தனர். அவர்களுக்கு வேலை வாய்ப்பு பெற்றுத்தர அரசு சிபாரிசு செய்யுமா? மதுரையில் தொழிற்சாலை தொடங்குவது குறித்து பரிசீலனை செய்யப்படுமா?

கருணாநிதி:- மதுரையில் கார் தொழிற்சாலை தொடங்கு வதற்கு ஒப்புதல் பெற்றுத்தந்தால் எங்களுக்கு ஆட்சேபனை எதுவும் கிடையாது.

திருநாவுக்கரசு (அ.இ.அ.தி. முக.):- இது தனியார் தொழிற் சாலையா, அல்லது கூட்டு நிறுவனமா? அரசு ஒதுக்கி உள்ள இடம் இலவசமாக தரப் படுகிறதா?

கருணாநிதி:- அரக்கோணத் தில் தொழிற்சாலை தொடங்க அரசு நிலம் இலவசமாக வழங்கி இருந்தோம். இப்போது ஸ்ரீபெரும்புதூரில் எப்படியும் இடம் தரவேண்டும். ஆக்கிர மிப்பு இடங்களை விலைக்கு வாங்கித்தான் தரவேண்டியது உள்ளது.

30 ஆயிரம் பேர் பலன்

அப்துல் லத்திப் (தேசிய லீக்):- கார் தொழிற்சாலை மூலம் எத்தனை பேர் வேலை வாய்ப்பு பெறுவார்கள்.

கருணாநிதி:- நேரடியாக 3 ஆயிரம் பேரும், மறைமுகமாக 30 பேரும் இந்த தொழிற்சாலை மூலம் பலன் பெறுவார்கள்.

டாக்டர் கிருஷ்ணசாமி (தேவேந்திரகுல வேளாளர்):- 14 ஆண்டுகளுக்கு விற்பனை வரி தள்ளுபடியால் அரசுக்கு இழப்பு ஏற்படுகிறதே.

கருணாநிதி:- 3 ஆயிரம் பேர் நேரடியாக பணியில் சேரு தால் அரசு இழப்பு பற்றி கவலைப்படவில்லை. மேலும் ஏற்கனவே கடந்த ஆட்சியில் இந்த சலுகை தரப்பட்டு விட்டதால் மாற்றம் செய்ய முடியாமல் போய்விட்டது.

லாப பங்கு

சொக்கர் (தமா.கா.):- அந்த நிறுவனம் அரசுக்கு லாப பங்கு தருமா? அரசின் முதலீடு எந்த அளவு இருக்கும்.

கருணாநிதி:- அது தனியார் நிறுவனம். இடம் வாங்கித் தருவது அரசின் பொறுப்பு.

மேற்கண்டவாறு கருணா நிதி பதில் அளித்தார்.